**O.S.No.35/2018 நாள் 13.02.2026 PW 1 – திரு. ராஜாசுந்தரம்**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை(6 ம் பிரதிவாதிதரப்பில்)

இந்த வழக்கில் என்ன பரிகோரம் கோரியுள்ளேன் என்றால் எங்கள் நிலத்தை அளக்க கேட்டுள்ளேன். சர்வே எண். 1533 ல் சரோஜாவிடம் வாங்கிய 50 செண்ட் மற்றும் நீதிமன்றம் மூலம் 50 செண்ட் வாங்கியுள்ளநிலையில் எந்த இடத்தை அளக்க கேட்டுள்ளேன் என்றால் நீதிமன்றம் மூலம் வாங்கிய இடத்தை அளக்க கேட்டுள்ளேன். வா.சா.ஆ–24 டெலிவரி அத்தாட்சியில் நானும் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ–24 சர்வே உதவியுடன் கிராம நிர்வாக அதிகாரியுடன் தபசில் கண்ட சொத்திற்கு வாழ்விப்பு கட்டளையில் கண்ட தபசில் கண்ட சொத்தை கிராம நிர்வாக அதிகாரி முன்னிலையில் சர்வேயர் உதவியுடன் தபசிலை அளந்து எனக்கு கொடுக்கப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். நான் கோமதியம்மாளின் வாரிசுகளிடமிருந்துதான் 6 ல் 5 பங்கை வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். 6 வது பங்கு நிலம் இந்த வழக்கின் 7 ம் பிரதிவாதி தனலெட்சுமியிடம் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்றம் மூலமாக வாங்கிய 5 பங்கை எனக்கு தனித்து பிரித்து கொடுக்க சொல்லியும் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த 5 பங்கை பிரித்து கொடுப்பது 7 ம் பிரதிவாதி தனலெட்சுமிதான் கொடுக்க வேண்டும் என்றால் நீதிமன்றத்தில் அளந்து கொடுத்த சொத்தை அளந்து கொடுக்க வேண்டும். நீதிமன்றத்தில் கொடுத்தது தனலெட்சுமியுடன் பிரிவின்றிஅடையாளம் காண்பிக்கப்பட்டு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, அடையாளப்படுத்திதான் நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்டது. முன்பே நீதிமன்றம் மூலமாக நான் வாங்கிய சொத்தை அடையாளம் காண்பிக்கப்பட்டு கொடுக்கப்பட்டதால் நீதிமன்றத்தில் தற்போது கேட்கவேண்டிய அவசியமில்லை என்றும், எனக்கு அந்த பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. 6 ம் பிரதிவாதியை பொறுத்து குறிப்பிட்டு எந்த பரிகாரமும் இந்த வழக்கில் கேட்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ–24 ல் தபசில் சொல்லும்போதே 6 ம் பிரதிவாதி சொத்தின் முன்பாத்தியஸ்தர்களான மீனா, பாலசுப்பிரமணியன் அவர்களின் புஞ்சைக்கும் மேற்கு என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறானது. வழக்கில் 1983 ஆம் வருடம் சர்வே எண். 1533 ன் உரிமையாளரான பொன்னம்மாளின் அதிகார முகவர் செய்து கொடுத்த கிரைய பத்திரங்கள் நான்குமே தவறுதலாக சொல்லப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த 4 கிரைய பத்திரங்களில்

ஒன்றுதான் கோமதியம்மாள் வாங்கியது என்றால் சரிதான். கோமதி அம்மாளுக்கு ஆவண எண். 379/1983 என்று கிரைய பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் முதலில் பதிவு செய்யப்பட்டது ஆவண எண். 379/1983 தான். ஆவண எண்கள் 377/1983, 378/1983 ஆகியவை முதலில் ஏற்பட்டதல்ல. ஆவண எண்கள் 377/1983, 378/1983 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தாலும் ஆவண எண். 379/1983 தான் முதலில் பதிவு செய்யப்பட்டது என்று சொல்லியுள்ளேனா என்றால் அதற்காகத்தான் வழக்கே தாக்கல் செய்துள்ளேன். நான் மற்ற பிரதிவாதிகளின் இடத்தை அபகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு பொய் வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. கோமதியம்மாள் ஆவணம் முறையானது இல்லை என்றும் 4 பத்திரங்களும் தவறானது என்று சொல்லியுள்ளநிலையில் இதுகுறித்து வாழ்விப்பு செய்த நீதிமன்றத்தில் எந்த ஆட்சேபணையும் எழுப்பவில்லை என்றால் இல்லை. சர்வே எண். 1533 ல் மேற்கடைய 50 செண்ட் நிலம் சரோஜா என்பவருக்கு விற்கப்பட்டது என்றால் சரிதான். அந்த 50 செண்ட் நிலத்தை 2010 ஆம் வருடம் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். சரோஜா கிரையம் வாங்கிய சொத்திற்கு 50 செண்ட்டிற்கு அளவுகள் சொல்லப்படவில்லை என்றாலும், மால் மட்டுமே சொல்லப்பட்டுள்ளது என்றாலும் கிழமேல் தென்வடல் அளவுகள் சொல்லப்படவில்லை என்றாலும் சரிதான். அதே நாள் கிழக்கடைய 50 செண்டை N.K.D.ஆண்டவர் என்பவருக்கு வா.சா.ஆ–3 ஆவணத்தின் மூலம் கிரையம் செய்து கொடுத்த ஆவணத்திலும் மால் மட்டும்தான் சொல்லப்பட்டுள்ளது என்றாலும், கிழமேல் தென்வடல் அளவுகள் சொல்லப்படவில்லை என்றாலும் சரிதான். பிராதில் நிலை 2 வரைபடத்தில் நான் N.K.D.ஆண்டவர் என்பவர் வாங்கிய சொத்திற்கு கிழமேல் தென்வடல் அளவுகள் சொல்லப்பட்டுள்ள நிலையில், இந்த அளவுகள் குறித்த ஆதார ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் கிழமேல், தென்வடல் சொல்லியுள்ளது நானே பொய்யாக அளவுகளை சொல்லியுள்ளேன் என்றாலும், அதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்து பிரதிவாதிகளின் இடத்தை அபகரிக்க வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் 2010 ல் சரோஜா இடத்தை வாங்கியபோதே கிரைய ஆவணத்தில் உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அந்த காலகட்டத்திலேயே உட்பிரிவு செய்யப்பட்ட விவரம், எனக்கு தெரியும் என்பது தெரியவருகிறது என்றால் சரியல்ல. நான் சரோஜாவிடம் கிரையம் பெற்ற விவரத்தையே இந்த வழக்கில் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்குரிய சொத்தை அரிதியிட்டு கொடுக்கப்பட்டதால் தற்போது வழக்கில் Symbolic possession என்று

சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் கோமதியம்மாளின் வாரிசான 7ம் பிரதிவாதியுடன் மட்டும்தான் கூட்டு அனுபவத்தில் உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து அளந்து கொடுத்துள்ளார்கள். நான் கூட்டு அனுபவத்தில் உள்ளதாகவும், அதை பாகம் பிரித்து கேட்பதற்காகவும் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முன் பாக்கியதஸ்தர்களான பொன்னம்மாளையோ, அவரது வாரிசுகளையோ, அவரது பொது அதிகார முகவரையோ, இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் நீதிமன்றம் மூலம் சொத்தை ஒப்படைத்துவிட்டதால் அவர்களை சேர்க்கவில்லை. கோமதியம்மாளின் வாரிசையோ, அவர்கள் சொத்து வாங்கிய சுந்தரேசனையோ இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் ஏற்கனவே நீதிமன்றத்தின் மூலம் சொத்தை ஒப்படைத்துவிட்டதால் அவர்களை சேர்க்கவில்லை. 6ம் பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர்களான மீனா, பாலசுப்பிரமணியன் ஆகியோர்கள் சொத்திற்கான பெரும் கிரைய தொகையை கொடுத்துதான் சொத்தை கிரையம் பெற்றுள்ளார்கள் என்றாலும் அவர்கள் வாங்கிய சொத்திற்கு உட்பிரிவுசெய்து 1983ஆம் வருடம் முதல் தொடர்ந்து ஆண்டனுபவித்து வந்து 6ம் பிரதிவாதிக்கு முறையாக கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றாலும் ஆகவே அவர்களுக்கு பாலசுப்பிரமணியனுக்கு 12 செண்ட் என்றும், மீனாவிற்கு எதுவும் கிடையாது என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. முதலில் கோமதியம்மாள் வாங்கினார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிராது வரைபடம் நானாகவே தப்பும் தவறுமாக தயார் செய்துதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு எந்தவிதமான ஆதாரமும் அற்றது என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதியை பொறுத்து செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.